DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -9

| | | |
|---|---|---|
| Name | திரு.ரவிச்சந்திரன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 18.03.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3,A4,A5 absent. 355 BNSS petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வருகிறேன். கடந்த 24.08.2023ம் தேதி திருவையாறு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, இரவு 8.37 மணிக்கு தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று இரவு 10.00 மணிக்கு தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு அவசர சிகிச்சைபிரிவில் உள்நோயாளியாக இருந்த கிருபானந்தம் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று 25.08.2023ம் தேதி 01.30 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.261/2023 இதசபிரிவு 147,148,341,294(பி),307ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ**.8.** பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து எனக்கு வந்த இரகசியத் தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன். ஆனால் முதல் தகவல்அறிக்கையில் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்த விவரம் குறிப்பிடவில்லை. புகார் வாக்குமூலம் சொல்லச்சொல்ல என்னால் எழுதப்பட்டது. புகார் வாக்குமூலம் சொல்ல சொல்ல என்னால் எழுதப்பட்டதாக புகார் வாக்குமூலத்தில குறிப்பு எதும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எத்தனை மணிக்கு

ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன் என்றால் நேரம் ஞாபகம் இல்லை. திருவையாறு காவல்நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே 2 கிமீ தூரம் இருக்கும். திருவையாறு நீதிமன்றத்திற்கு எங்கள் காவல்நிலையத்திலிருந்து தினமும் ஒரு காவலர் செல்வார். அவரின் அலைபேசி எண் எங்களின் காவல் நிலையத்தில் இருக்கும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவருக்கு 25.08.2023 இரவு 10.00 மணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலுள்ள வாசகங்களின் inkம் புகார்தாரர் கையொப்பத்தில் உள்ள inkம் வேறுவேறாக உள்ளது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்திலுள்ள வழக்கு பதிவு செய்யப்பட்டது சம்பந்தமான குறிப்பிலுள்ள கையொப்பம் வேறு ink ஆல் உள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை 2 நாள் கழித்து தான் விசாரித்தார். ஆய்வாளர் விசாரிக்கும் வரை நான் 2 நாட்களாக காவல் நிலையம் சென்று கொண்டுதான் இருந்தேன். ஆய்வாளரும் இருந்தார். ஆய்வாளர் விசாரணையில் புகார் வாக்குமூலத்தை நான் பெற்றதாக ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்